காஞ்சிபுரம் மாவட்டம்

**C**

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | |

*நேரம்: 1. 30 மணி*

## வணிகவியல்

*மதிப்பெண்கள்: 50*

### பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **10×1=10**

1. வியாபாரம் மற்றும் வணிகம் ............ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
   அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்
2. மருத்துவர் தொழில் என்பது
   அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்
3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
   அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம்
   இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்
4. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்
   அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுறவுச் சங்கம் ஈ) நிறுமம்
5. இந்துக் கூட்டுக் குடும்ப வியாபாரத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
   அ) உடன்படிக்கையால் ஆ) பிறப்பால்
   இ) முதலீட்டின் அடிப்படையில் ஈ) நிர்வாகத்தின் அடிப்படையில்
6. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது
   அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்
   இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்
7. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவது
   அ) தொண்டு நிறுவன நோக்கம் ஆ) சேவை நோக்கம்
   இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்
8. கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
   அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம்
   இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்
9. ஒரு அரசாங்க நிறுவனம் எவர் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
   அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
   இ) இந்தியத்தலைமைநீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்
10. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1 ..............ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
    அ) 1936 ஆ) 1935 ஈ) 1934 ஈ) 1933

## பகுதி - ஆ

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:

5×2=10

11. பண்டமாற்று முறை என்றால் என்ன?
12. வேலை என்றால் என்ன?
13. வியாபாரம் என்றால் என்ன?
14. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
15. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
16. வங்கியின் பொருளை எழுதுக.
17. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?

## பகுதி - இ

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:

5×3=15

18. மனிதச் செயல்பாடுகள் என்றால் என்ன?
19. போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.
20. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
21. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
22. அரசு நிறுமம் என்றால் என்ன?
23. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
24. வணிகம் பொருள் தருக.

## பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

3×5=15

25. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக.

(அல்லது)

இந்திய ரிசர்வ் வங்கியின் ஏதேனும் 5 பணிகளை விளக்குக.

26. தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஓர் ஒப்பீடு செய்க.

(அல்லது)

கூட்டுறவின் கொள்கைகள் என்ன?

27. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் ஏதேனும் ஐந்து கூறுக.

(அல்லது)

தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகளை விவரி.

--------